# திராவிட நாடு

## மலர் 2, இதழ் 40

## December 19, 1943

Record no. 1005

ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

| விளம்பர விகிதம். |
|---|
| இஞ்சு ஒன்றுக்கு 1-0 0. |
| சர்க்கார் கோர்ட்டு 2-0-0 |

# திராவிடநாடு

| | |
|---|---|
| வருட சந்தா ரூ. | 5—0—0 |
| ஆறுமாதம் ரூ. | 2—8—0 |
| தனிப்பிரதி ரூ. | 0—1—3 |

மலர் 2 | காஞ்சிபுரம் 19—12—43 சுபானு மார்கழி 4—ஞாயிறு | இதழ் 40.

நே—7. தோழர் கலியாண சுந்தரனுக்கு

## கைவல்யம் கடிதம்.

தங்கள் படிப்பும் உழைப்பும், உங்கள் சமூகமான எங்களுக்கு உதவவேண்டுமென்பதனுல் மட்டுமல்லக்கடிதம் எழுதுவது. பின்வரும் பண்டிதர்கட்கு உங்களைப்போலப் படிப்பும்பயிற்சியும், உழைப்பும் வரவேண்டும்; அது பார்ப்பாரப் பாட்டிற்குப் பக்கத்து மேளமாகக்கூடாதென்று நினைத்துமே எழுதப்படுகிறது.

ஒரு தேசத்தையும் அந்த்த்தேசத்து மக்களையும் அடிமைகொள்ள, முதலில் பாஷையையும் கொள்கைகளையும் குழப்பிக் குட்டிச்சுவராக்கித் தனக்குள் வைத்துக்கொள்வதேவழக்கம். அது போலவே நமது நாடும் பாஷையும் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு உதவி அளித்தவர்கள் நமது நாட்டுப்பண்டிதர்களேயாகும். கம்பர், சேக்கிழார் முதற்கொண்டு தங்கள் வரையிலுமுள்ள வித்துவான்களின் விபரங்களைச்சொல்ல ஏட்டிலும் இடமில்லை, கையும் வலிக்கும். “பார்ப்பனர்களைப் பேணுதிப்ப உள்ளத்தால்” என்ருர்கம்பர். “பார்ப்பனரின்கல்லதாசிமகன் என்கிற சற்சூத்திர குலத்தில் பிறந்தவன் தமிழன்” என்ருர் சேக்கிழார். தாங்களோ தேசபக்தனில் ஜஸ்டிஸ் கட்சியைத் திட்டப்போட்ட வேஷம் அறுபதாம் ஆண்டுவிழா ரானடே ஆல் பிரசங்கத்தில் நடித்த நடிப்போடு முடிந்ததோ, இல்லையோ, உங்களுக்குத்தான் தெரியும்.

வடநாட்டுப் பண்டிதர்களும் சாஸ்திரங்களும் ஒன்று சேர்ந்து யோசனை பண்ணி, நாம் என்றைக்கும் பிரிவுபட்டு நிற்கவழிகள் தேடியதை நமது நாட்டிலும் கண்டோம். அவர்களுக்கு மிகவும் இனிமையாகத் தோன்றிய சுதந்தரங்களை நாம் அநுபவியாமல் தடுத்ததையும் கண்டோம். சர்வ சாதாரணமாக வழங்கத்தக்க உரிமைகளுக்குச் சிறப்புரிமைகள் என்றும் பிறப்புரிமைகள் என்றும் பெயர் சூட்டி, மானுஷீயத்தை அவமானப்படுத்தியதையும் பார்த்தோம். இதற்கெல்லாம் எத்தனையோ பல்மான சாஸ்திரமூட்டைகளை வைத்துக்காத்தும், அந்த அசம்பாவிதத்தை எல்லாம், நம்மாலும் அவர்களாலும் திறமாகக்காப்பாற்ற முடியவில்லை. அவர்களுக்குப் பலமென்று கருதிய முறையும், நமக்குநன்மை என்று நினைத்த நம்பிக்கையும் துர்ப்பலமாக முடிந்தது.

வடநாட்டுப் பண்டிதர்கள் கட்டிவிட்ட கதைகளையும், அவைகளை ஏட்டில் இணைத்து எழுதின எண்ணங்களையும், முன் இருந்த நமது பண்டிதர்கள் ஆலோசித்துப் பார்க்காமல், அவற்றை வாரி எடுத்து மண்டையில் நிறையத்திணித்து அவரவர்கள் மார்தட்டிக், குறுகிய களத்தில் குதித்துக் குதித்து விளையாடினர்களேயல்லாமல், மெய்யான உலகத்துடன் விவகாரங்கள் நடத்தவேயில்லை. வடநாட்டார் தங்கள் கற்பனு சக்தியால் ஏற்படுத்திய உலகத்துடனே தான் விவகரித்தார்கள். எப்படிச் சுற்றிச் சுற்றி வந்தாலும் ஆரியக்கற்பனைக் குழியில் சருக்கி விழ வேண்டித்தான் முடிந்தது, அப்பொழுது நமது பண்டிதர்கள் தோற்றுப் போனதாக நினைத்து, நமது பாஷையையும் படிப்பையும் கீழாகவே நினைத்து நமது பாஷைக்கும் பண்டிதர்களுக்கும் பிச்சை கொடுத்ததாக இன்றும் சொல்லியே வருகிருர்கள். நாற்பது வருஷங்களுக்கு முன், சென்னை சைவசித்தாந்தி சோமசுந்தர நாயக்கருக்கும்—வேதாந்தி சிதம்பரம் சீனுவாச சாஸ்திரிக்கும் நடந்த வாக்குவாதத்தைப் படித்தவர்கட்கு நான் சொல்லும் உண்மை விளங்கும். இந்த விதமாக நமது புராதன நாடகம் சோகமயகவே முடிந்திருக்கிறது. அந்த அசம்பாவிதத்தின் செத்தபாரம் இனியும் நெடுநாள் இருக்க வைக்கலாமா? அதற்கு நியாய நெறிப்படி தீர்ப்புச் செய்யாவிடில், யுத்த முடிவில் அந்தச்சோக நாடகம் கூத்தாடுமே! யுத்தம் ஒருநாள் முடிவடைந்து விடும். அந்தச் சமாதான பஞ்சாயத்துச் சட்டதிட்டங்கள் விதிக்கும் இராசாங்க சபையில், தமிழ்ப்பாட்டுப் பாடச்சொன்னவர்களை எல்லாம் அடியோடு தொலைக்க வேண்டுமென்கிற ஆச்சாரிகளைப் போன்றவர்கள் இருந்தால் நம்கதி என்ன வரும்? தேசியவாதியான நீங்களே ஆலோசித்துப் பாருங்கள்.

இருள்நிறைந்த நமது நாட்டில், இங்கிலீஷ் வந்ததால் அங்கங்கே ஒளியினது பிரகாசங்கள் காணப்படுகின்றன. இந்தக் காலத்து நம்பண்டிதர்கள், பலசரித்திரம் படிக்கிருர்கள்; மனமும் விசாலப்படுகிறது. நவீனஉலகத்தில் சனத்தின் சேவசத்திக்கும், சாதியின் நியந்தனைகளுக்கும் போர்நடக்கிறது என்பதையும் தெரிகிருர்கள். சாதி, ஜனத்தை அழிக்கிறது. மானுஷிய பொதுஜன இலட்சியங்களைப் பரவச்செய்தல் முக்கியமல்ல என்ற எண்ணத்திலிருந்து ஜாதியின் திறமை வளர்ப்பதாகிய கல்நெஞ்சசம்பிரதாயம் T. T. கிருஷ்ணமாச்சாரியார் ரானடேஆலில் பேசினவாக்கால்தெரிந்துகொள்கிருர்கள். சுதேசமித்திரன் பத்திராதிபர், சர், C. P. இராமசாமி அய்யர் இவர்களுடைய பிரசங்கத்தையும் படித்திருப்பார்கள். தனிமனிதன், கோபதாப உணர்ச்சிகளின் சமயத்திலும் யோசனை பண்ணுவதுண்டு. அதுபோல், சுதேசமித்திரன் பத்திராதிபரும், சர். C. P. இராமசாமி அய்யரும் தங்கள் தனிமனதில் ஆலோசித்திருப்பார்கள். கூட்டுமனசு உணர்ச்சியுடன் கலக்கும்போது யோசனைபண்ணவில்லை. அதனுல் அவர்கள் புத்தி மாறிவிட்டதையும் ஆலோசிக்கிருர்கள். ஆரியர்கட்டின கற்பனுசக்தியில் அகஸ்தியர் தோன்றினுரேயல்லாமல், உண்மை அகஸ்தியரை எங்கும் காணவுமில்லை, இல்லவுமில்லை. நமது பண்டிதர்கள் கற்பனைக்கு வசப்பட்டு, ஒன்றும்கிடைக்காத இடத்திலெல்லாம், அகஸ்தியரைக் குடிவைத்துவிட்டோமென்று, பண்டித நமசிவாய முதலியார் சொன்னதை நினைக்கிருர்கள். எப்பொழுதும் சுற்றிக்கொண்டு உருண்டையாகவிருக்கும் பூமிக்குள் யார் எங்கிருந்தாலும் தாழ்வதும் உயர்வதும் எப்படி? எப்படி இருந்தாலும் வட்டத்துக்குள்தானே இருக்கவேண்டும். கோளத்திற்குக் குறைவில்லையே! சிவபெருமான் வடக்கே வந்திருந்தார், தெற்கு தாழ்கிற்று; சமப்படுத்த, அகஸ்தியரைத் தெற்கேபோய் இருக்கச்சொன்னுர்; பூமிசம்மாயிற்று. இங்குதான் சிவபெருமானும் பார்ப்பனர்களும் ஒன்று, சமம் என்று ஆரியப்பண்டிதர்கள் எய்த்த

([illegible]-ம் பக்கம் பார்க்க)

# வர்ணாஸ்ரமம் ஒழிக!

—[ 2—பாதன். ]—

இலட்சியத்துக்காகவும், அந்த இலட்சியத்தை அடையஉதவும் கருவிபோன்ற கட்சிக்காகவும், சொந்த நலனையும், உயர் பதவியையும் வெறுத்தொதுக்கும் வீரமும், கஷ்ட நஷ்டமேற்கும் சகிப்புத்தன்மையும், ஒருவருக்குஏற்பட்டுவிட்டால், அவரைத்தலைவராகக்கொண்ட கட்சியும் அதனைச்சார்ந்துள்ள மக்களும், முன்னேற்றமடைய முடியுமென்பது திண்ணம். அரண்மனை மாடியிலே அம்சதூளிகாமஞ்சத்திலே அமர்ந்துள்ள அரிவையை அடையவேண்டி, ஆங்குசென்ற ஆணழகன், அகழியின் ஆழத்துக்கோ அதிலே அலையும் முதலையின் வாய்க்கோ அஞ்சினால், யாங்ஙனம், மங்கையைப் பெறமுடியும்! இலட்சியமெனும் எழிலுடையாளைப்பெற்று இன்புற எண்ணுவோரிற் பலர், அகழிக்கு அஞ்சி, புறத்தேநின்று புகைபடுமனமுடன் போரிட்டுக்கொண்டோ, புலம்பியோ கிடப்பர். ஒரு சிலருக்கே, உழவுக்கேற்ற விளைவுஎனுமொழி வழி நடக்கும் அறிவாற்றலுண்டு. அவர் தமைச்சலிப்பு அண்டாது. சாகசத்துக்கு அவர் பலியாகார். போலியைக்கண்டு ஏமாறார். புல்லரின் புன்மொழிகேட்டுப் புழுங்கார். தாக்கிய வேலினைத்தூக்கியெறிந்துவிட்டு, போர்க்குப்புகின் யார்க்கும் இது நேரல்முறையே என்பது தெரிந்து புலியுடன் போரிடுகையிலே, கிலிஎனும்வலி கொளல்கூடாது என்பதறிந்து, உயிர்கெடுவரை, நெடுவரைபோல் நின்று போரிடுவர் வீரர். கட்சிப்பணியும், களத்துப்பணி போன்றே, வீரருக்கு ஏற்றதேயன்றி, விலாவிலே விரக்திப்புழு நடமாடுவோருக்கோ, மனதிலே சுயநலமெனும் குளவி கொட்டிடுவோருக்கோ ஏற்றதன்று. சிறு செயல்புரிய மட்டுமே தெரிந்தோர்க்குப் பெருநெறி பிடித்தலரிது. கட்சிப்பணிக்கு இத்தகைய கடமையுணர்ந்த காவலர் தேவை, அதிலும், தூங்கிடும் இனத்தைத்தட்டி எழுப்பிடும் பணி, சாமான்யமானதன்று. நான், சர். சண்முகம் அவர்களை, இப்பணிபுரிய முன்வரவேண்டுமென்றுதான், அழைக்கிறேன். அரசோச்ச அல்ல! அதற்கு ஆயிரம் ஆட்கள், நான் நீ என்று போட்டியிட்டுக்கொண்டு முன் வருவர் என்பது எனக்குத்தெரியும். பாணரையும் பாடினிகளையும் முன் அனுப்பிப்பரிசும் ஈந்து, பட்டம்பெற முயலும் பேர்வழிகள் பலருண்டு. மரம் பழுத்தால் வௌவாலை வாவெனக்கூவி அழைப்பானேன்! "போ", வெனத்துரத்தவே, ஆட்கள் வேண்டும். நான், சர். சண்முகத்துக்கு அனுப்பும் அழைப்பு, அரசோச்ச அல்ல-அரசு அமைக்க!! இரண்டுக்கு மிடையே உள்ள வித்தியாசம் பெரிது, நாவாயில் செல்ல அழைப்பதற்கும், நாவாய் கட்டிச் செலுத்துமாறுகூறற்கும் உள்ள வித்தியாசம் போன்றது. சர். சண்முகத்தின் ஆற்றல், அரசாள்வதின் மூலமாகவிளங்குவது, எளிது, ஆனால், அரசு அமைப்பதன் மூலம் அவர் ஆற்றலின் சிகரம் காண்போம்! கரியைக்கொண்டு கரும்பு பறிக்கச் செய்வதா, மலைமரங்களையன்றோ முறித்திடச் செய்யவேண்டும்! வேங்கையை அழைத்து விளாங்கனியை ஒடித்திடச் செய்வதா! சர். சண்முகத்தின் அறிவாற்றலுக்கேற்ற காரியம், அரசாள்வதல்ல, அரசு அமைப்பது! அவர் ஆண்ட கொச்சியிலே, சின்னாட்கள் மிஸ்டர் டிக்சன், எனும் முன்னாள் சேலம் கலெக்டரன்றோ அரசாண்டார்! கொச்சியோ, வேறு எந்தச்சீமையோ, ஆள்வது, கொங்கு வேங்கையின் வீரதீரத்துக்குச் சரியான வேலை கொடுப்பதாகாது.

மாசிடோனியா (Macedonia) மன்னன் பிலிப், தன் மகனுக்கு, அரணும் அழகும் அமைந்த அரசைத்தந்து சென்றான். மகன், அந்த மண்டல முடிதரித்து மட்டுமே ஆண்டிருப்பின், அவன் புகழ் மங்கியிருந்திருக்கும். இங்கும் எங்கும், இன்றும் என்றும், அவன்புகழ் எவரும் படித்து இன்புறுமாறு, அவன் தன் நிலையைச்செய்து கொண்டான்.! யாங்ஙனம்? தந்தை தந்த தரணியுடன் அமைந்தானில்லை. "அவன் மகன் இவன்" எனும் சொல் போய், "இவன் தந்தை அவன்" எனும் மொழி தோன்றுமாறு, அவன் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டான். அஃது என்னையெனில், பிலிப் தந்த மாசிடோனியா, நாட்டு எல்லையிலே நின்று விடாது, அலெக்சாண்டர், காற்றெனச்சுழன்றுகளம்பலகண்டு, நாடு பல வென்று, நானிலம் புகழ, இன்றும் வரலாற்றின் மூலம், வாழ்கையுடன் வாழுகிறான்.

"பொன்மூட்டையினைக் கழுதையின் முதுகிலே ஏற்றி, அக்கழுதையை அனுப்பினால், அது பிடித்துவிடும் ஒரு பட்டிணத்தை!" என்றுரைத்தானாம் பிலிப். அதாவது, இலஞ்ச இலாவணம் கொடுத்து எந்தஇலங்கையையும் பிடித்துவிடலாம் என்றான்—எங்கும் விபீஷணர் கிடைப்பர் என்ற எண்ணத்தால்! அலெக்சாண்டரோ, பொன்கொடு போனானில்லை, போருக்குப்போனான், புகழொடு திரும்பினான், தன் உயிரைப்பணயமாக வைத்து வீர விளையாட்டாடினான், வேந்தர்க்கழகு வேலியாளுதல், வீரர்க்கழகு வேலி கோலுதல் என்ற உரைக்கேற்ப. மாசிடோனியாவை மட்டுமே அலெக்சாண்டர் ஆண்டிருப்பின், கிரேக்க நாட்டிலேயோ, அதை ஒட்டிய நாட்டிலேயோ மட்டுமே அவன் பெயரை, மாசிடோனிய மன்னருள் ஒருவன் என்ற பட்டியிலே, படிப்பர், உலகு அவனை அறிந்திராது. இன்றோ! உலகு அறியும், உலகில் பலப்பல அழியும், அவன் புகழோ நிலைத்து நிற்கும்! அரசு ஆள்வதற்கும், அரசுஅமைப்பதற்கும், வித்தியாசம் என்னை எனில், பிலிப்பின் மகனாக வாழ்வதற்கும் அலெக்சாண்டராகத்திகழ்வதற்கும் உள்ள வித்தியாசமென்பேன்! சர். சண்முகத்தை, நான், அவர் ஆற்றலறிந்தே அரசாள அழைக்காமல், அரசு அமைக்க அழைக்கிறேன். மரத்தில் பழங்குலுங்கும் வேளையிலே, மந்திதாவுமானாலும், கனியுதிரும்! அதுபோலக் கட்சி கனியுந்தறுவாயிலே, கடுவனோ மந்தியோ களித்துக் கூத்தாடும், கனி கிடைக்குமெனும் கருத்தினால். ஆனால், தோட்டம் அமைத்துத் தூரவு எடுத்து, நீர்பாய்ச்சித்தரு வளர்த்திடும், செயலே, முக்கியமானது. சர். சண்முகத்தை நானழைப்பது, தீஞ்சுவை தரும் பதவிப்பலாவைப் பறித்திடஅல்ல அதற்குக் கீச்சிடும் கடுவன்களும், மையலூட்டும் மந்திகளும் என்றுமுண்டு, எங்குமுண்டு. நான், சர். சண்முகத்தை அழைப்பது, திராவிடத்தனி அரசு அமைக்க, வெறும் பதவியில் அமரவல்ல.


சர். சண்முகம் அவர்களைத் தலைவராக்கும் பணியினைத்தான் வேறு சிலர் மேற்கொண்டுள்ளனரே, பயமேன் உனக்கு, என்று கூறுவீர்கள். உண்மையிலே, வேறுசிலர் வேண்டி அழைக்க வேண்டிய அளவு, சர். சண்முகம், தூரவிலகி நிற்கலாமா, நிற்கிறாரா, நிற்பது ஏன் என்றகவலை எனக்கு. வினைமுற்றிய தலைவன், வீடு திரும்பாது, சோலையிலோ சாலை ஓரத்திலோ, தங்குவானேன்? அவர், தமது அன்புக்கு இருப்பிடமான மனைபுக, அழைப்பு வேண்டுமா, அதுவா, தமிழ்ப்பண்பு, என்று, என்மனம் என்னைக் கேட்கிறது. அதுமட்டுமல்லவே, மகனே, வா! மாசிலா மணியே வா, வா! தலைமகனே வா, வா!—என்றுவருக அந்தாதியைப் பலர்பாடப்பாட எனக்குப் பயந்தான் மேலிடுகிறது.

"ஊரைக்கலக்கிவைக்கும் ஊத்துக்காட்டு அம்மையே, நாட்டைக்கலக்கி வைக்கும் நல்லபத்ரகாளியே, வேண்டி அழைக்கிறோமே வேலாத்து அம்மையே," என்று, சிலம்பைச்சுற்றி, உடுக்கை முழக்கி, உள்ளேசென்ற குடிவகை, ஆவிமயமாக வெளியே வருமளவு உரத்த குரலிலே அம்மனைவேண்டிக் கூவும், பூஜாரிகளை நான் கண்டிருக்கிறேன். அதன்பலனாக ஆவேசம்வரும். வந்ததும் ஊத்துக்காட்டாளோ, சோத்துக்குடையாளோ, பூஜாரியையும் பக்தர்களையும் பார்த்து, "ஆடுவெட்டிக் கோழிவெட்டி பூஜை ஏண்டா போடலே? ஆடிமாத நோன்புக்கு ஆறு இலை போடலே, வேண்டிக் கொண்டபடிவிருந்துபடைக்கவேயில்லே!' என்று கோபத்தைக்கக்கக் கேட்டிருக்கி

7-ம் பக்கம் பார்க்க.

# ஸ்டாலின் சர்க்கஸ்!

— விக்டர் —




ரிங்மாஸ்டர் ஸ்டாலின், மானேஜ்மெண்டுக்குட்பட்ட, அபூர்வமான சர்க்கஸ், விரைவிலே ஆரம்பமாகப் போகிறது. இதற்கான சகலஏற்பாடுகளும் செவ்வனே நடைபெற்று விட்டன. சர்க்கசிலே காட்டு மிருகங்களின் காட்சி உண்டல்லவா! ஸ்டாலின் சர்க்கசிலே, நாட்டைக்காடாக்கி, மனிதபலத்தைக் கொண்டு மிருகச்செயல் புரிந்த, சர்வாதிகாரிகள் எனும் மிருகமனிதர்கள், காட்டப்படுவர். ஒருவரால் ஒருவர் கெட்டதைக்கூறிக், காதுபிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் போடுவர். இந்தவேடிக்கையை வந்துகண்டுகளிக்கும்படி, கூவும் கூலிவேலை, வேறோர் ஆளுக்குக் கிடைத்திருக்கிறது. படத்தைக்கண்டால், சர்க்கஸ் காட்சி விளங்கும்!

இது, வெறும் கற்பனையல்ல, அச்சுநாட்டினரை ஏதேனும் திட்டவேண்டுமென்பதற்காகத் தீட்டிய காட்சியுமல்ல, உண்மையிலேயே, இது போல் நடைபெறுவது, உலகசமாதானமெனும் கட்டடவேலைக்கு நிதிதிரட்ட உதவியாக இருக்கும். இத்தாலி நாட்டிலே இன்று நேசக்கட்சியுடன் நின்று, பாசிசப்படையினைப்பழித்து, நாஜிப்படையை எதிர்த்துநிற்கும் படாக்ளியோ சின்னாட்களுக்கு முன்பு இதுபோன்ற கருத்தினை வெளியிட்டார். இந்தப்போர், கோடி கோடியாகப் பணத்தைப் பொசுக்கிவிட்டது. நேசநாடுகளின் வெற்றிக்குப்பிறகு, சமாதான உடன்படிக்கை ஏற்பட்டுவிடும். பிறகோ விமானங்களிலே வெடிகுண்டுகளுக்குப்பதிலாக உணவுப்பார்சல்களை அனுப்பவேண்டிய அளவு, பஞ்சமும் பரதவிப்பும் பல்வேறு நாடுகளிலே கூத்தாடும். நாடிழந்து வீடிழந்து, தொழிலிழந்து துயர் மிகுந்துள்ள மக்களுக்கெல்லாம் வழிசெய்ய வேண்டும். அதற்கு ஏராளமாகப்பணம் தேவை! பணம்திரட்டப்பல முறைகள் கண்டுபிடிக்கப்படும். அவைகளிலே ஒன்று, முசோலினி, ஹிட்லர், டோஜோ, என்போரைக்கூண்டிலே அடைத்து, "மகனைத்தாய் இழக்கச் செய்த மிருக மனிதரைக்காண்மின்!" என்று கூறி, உலகெங்கும் காட்டினால், அதன் கட்டணவசூல், ஏராளமாக இருக்கும், என்று படாக்ளியோ கூறினார். இந்தக்கூண்டுக்காட்சியை நிர்வகிக்க ஸ்டாலினே தகுதிவாய்ந்தவர்! அவருடைய ஆற்றலின் துணைகொண்டே, இம்மூன்று முரடர்களையும் பிடித்துக் கூண்டிலடைக்க முடியும். அடைத்தபின்னர், அவருடைய நிர்வாகத்திலே, இக்காட்சியை உலகெங்கும் அனுப்பிவித்தால், பெரும்பணம் திரட்டலாம். உலகு இக்காட்சியைக்காண ஆவலுடன் இருக்கிறது. அதுமட்டுமா! வீரஸ்டாலினை ஒருமுறை காணவேண்டும் என்றுள்ள மக்கள் கோடி கோடி! அவரோ, ஈரான் வரை வந்திருந்தார், தெஹ்ரானிலே தங்கினார், இங்குவரவில்லை; வந்திருப்பின்,... நினைக்கும்போதே நெஞ்சம் களிப்புக் கூத்தாடுகிறது.

தெஹ்ரானிலே, மார்ஷல் ஸ்டாலின், விருந்துகளிலே கலந்து கொண்டபோது ஓயாது, உரக்க உரக்கச் சிரித்தாராம்! காரணம், படாக்ளியோ, வெளியிட்ட யோசனையைக் கேட்டதனாலோ, என்னவோ, எனக்குத்தெரியாது. அதுகேட்டு அவர் அன்று சிரித்திடவில்லை என்றாலும், இன்று ஒரு அமெரிக்கப்பத்திரிகாசிரியர் வெளியிட்டுள்ள கருத்தினை அறியின், கைகொட்டிநகைப்பார் என்று எண்ணுகிறேன். தெஹ்ரானிலே மாநாடு நடத்தியதன் பலனாக, ஸ்டாலின் பெரியதோர் ராஜதந்திரவெற்றி அடைந்து விட்டார், கடந்த ஒரு நூற்றாண்டாக ரஷியா கண்டிராத அளவுள்ளது இந்த ராஜதந்திரவெற்றி என்றுகூறினார் இந்த அமெரிக்கநிருபர். என்னவெற்றி என்பதை விளக்குகையில், இந்தியாவைத்தொடும் அளவுக்கு ஸ்டாலின் சமீபமாகவந்து விட்டார்! என்றுகூறுகிறார். அமெரிக்காவிலே சிலருக்கு ரஷ்யாவின் ரணகளவீரம் அச்சத்தைக்கொடுக்கிறது. என்ன ஆகுமோ என்னநேரிடுமோஎன்றதிகில். இது, நிறையில்லா மனதுக்கு நேரிடக்கூடியதேயாகும். ஏகலைவனின் வில்வித்தைத்திறத்தைக்கண்ட துரோணர், இவனின் திறமையால் பின்னர்என்னென்ன நேருமோ என்று அஞ்சி, கட்டைவிரலைக் காணிக்கையாகப்பெற்றுக் கொண்ட கதைகூறுவார்களே, அதுபோல்,அமெரிக்காவிலேசிலருக்கு, ரஷியாவின் வீரத்தையும் நெஞ்சுறுதியையும் தந்துவிடும்படி கேட்கும்எண்ணம் உண்டாகக்கூடும்! ஆனால் இரவல் சட்டத்தின்மூலம் ஆயுதங்களைத்தரமுடியுமேயொழிய, அந்த எஃகுமனதை எவ்வண்ணம் தரமுடியும்! அந்த அஞ்சா நெஞ்சத்தைக்கண்டு அச்சமுறும் அவலத்தைக்கைவிட்டு, ரஷியக்கூட்டுறவு இன்றுபோல் என்றுமிருக்க வேண்டுமென்ற உறுதிபெற்றால், உலகு உய்யவழி உண்டு. அதை உணராது உளறும் சிலருடைய போக்கு, கண்டனத்துக்குரியது.

* * * *

"ஸ்டாலின் சர்க்கஸ்" ஏற்படுத்துவதிலே, ஒரே ஒருதடை ஏற்படக்கூடும். அந்தமிருக மனிதர்கள், இப்படிக் கூண்டிலே அடைபட்டிருக்கச் சம்மதியாமல், சாகத்துணியலாம்! பிணத்தைக்கொண்டு சர்க்கஸ் நடத்தமுடியாது. அந்தநிலைஉண்டானால் மட்டுமே, ஸ்டாலின் சர்க்கஸ் அமையமுடியாதேயொழிய, இன்று போரின் போக்கைப்பார்த்தால், விரைவிலே, அச்சுநாட்டுக் கொட்டம் ஒழியும் என்பது திட்டமாகத் தெரியவருகிறது. கெய்ரோ, தெஹ்ரான் மாநாடுகளைப் பற்றி மிஸ்டர் ஈடன், பார்லிமெண்டிலே, பேசுகையிலே, போர் விரைவிலே முடிவதற்கானதிட்டம் தயாராகிவிட்டது என்று கூறியிருப்பது, வெறும் பேச்சலங்காரமல்ல! ஜெர்மனியையும் ஜப்பானையும் முறியடிக்கவேண்டிய சகலதிட்டங்களும் தயாராகிவிட்டன. குறிப்பிட்ட ஒருநேரத்திலே, களத்திலே, இந்த

(5-ம் பக்கம் பார்க்க.)

# திராவிட நாடு

காஞ்சி 19—12—43 ஞாயிறு


## பட்டியின் பகற்கனவு!

"மன்னு! இதோ புறப்பட்டுவிட்டேன், மந்திரவாளையும், எடுத்துக்கொண்டேன், மாகாளிகோயில் பிரசாதம், மறந்துவிடப் போகிறீர்!

ஏ! வேதாளம்! வேதாளம்! புறப்படு, விக்ரமாதித்தியமன்னர், நாடாறுமுடிந்ததால் காடாறு துவக்குகிறுர், உடன்வர வேண்டுமே, முருக்கமரத்தின்மீது உறக்கத்திலே இராதே, புறப்படு போவோம்"

இவ்வாறுகத்தானே, மதியூக மந்திரியான பட்டி கூறி, விக்ரமாதித்திய மன்னர்முன், கைகட்டி வாய்பொத்தி நிற்க, உஜ்ஜினிமாபுரத்துச்சக்ரவர்த்தியாம் விக்ரமாதித்ய மகாராஜன்,காடாறுமாதம் நாடாறு மாதமெனும் தனதுமுறைப்படி காடாறுமாதம் கழிக்கப்புறப்பட்டார்!

பேசாமடந்தை, பேசிடும்வேதாளம், கூடுவிட்டுக்கூடுபாய்தல், கொதிக்கும் கொப்பரையில் குளித்தல், ராஜகுமாரத்திகளை மணம்புரிதல் முதலிய பலப்பலகட்டுக்கதைகள் கொத்துக் கொத்தாகக் காணப்படும் விக்ரமாதித்தன் கதை, நேயர்கட்குத் தெரியும். அந்த மன்னனுக்குமந்திரியாம் பட்டி. அவன்கூறுவானும் நாம்மேலே எழுதியுள்ளபடி மன்னு மாகாளிதந்த மந்திரவாளுடன் செல்வோம் வாரீர் என்று.

வடநாட்டிலே இருந்த வல்லரசுகளிலே குப்தவம்சம் என்பதொன்று. அதிலொரு மன்னன் இரண்டாம் சந்திரகுப்தன் என்பான். அவனோர் ஆரியதாசன், எனவே, அவனை விக்கிரமாதித்தன் என்ற பட்டமிட்டழைத்து, அவனுடைய புஜபலபராக்கிரமங்களைப்புகழ்ந்து, தேவியினருள் அவனுக்குண்டென்று புனைந்துரைத்து, அவன் செய்ததாக, நம்பொணுக் கதைகளைப் புளுகினர், நாவால் வாழும் ஆரியர். விக்ரமாதித்த சகாப்தம், என்று வடநாடுகளிலே வழங்குமளவு, அந்த மன்னனுக்கு ஆரியப்பிரசார எந்திரம் வேலை செய்தது. அந்தக்காலம் இன்றில்லை. உஜ்ஜினிமாகாளி ஊர்சுற்றி வருவதுமில்லை, மந்திரவாள் மாற்றுன் தலையைக்கொய்வதுமில்லை, கூடுவிட்டுக்கூடுபாயும் மன்னரும் இல்லை, தூதுசொல்லும் வேதாளமோ, இல்லை. ஆனல் மதியூகமந்திரியாம் பட்டி மட்டும், இருக்கிறுர்! எங்கே? என்பீர், பம்பாய் எனும் பட்டினத்திலே, பகற்கனவுகண்டபடி இருக்கிறுர், பட்டி!

விக்ரமாதித்தியருடைய ஆட்சியைப் புகழ்கிறுர்! அந்தக்காலத்தை எண்ணிக் கண்ணீர்விடுகிறுர்! அந்த வாழ்வுதான் ஈந்தநாள்வரும், என்று சோகிக்கிறுர். நாம் அடையவிரும்பும் சுயாட்சி, விக்ரமாதித்ய ஆட்சியாக இருக்கவேண்டும். அத்தகைய ஆட்சியிலேதான் நாம் பொலிவுடன், பண்புடன் விளங்குவோம். வருக அந்த ஆட்சி! என்று உள்ளம் குழைந்து உருச்செபிக்கிறுர், கனமாக இருந்து மெலிந்துப்போன, கனபாடி இனத்தவரான, நவீனப்பட்டி, நாவன்மையால் நீள் வையம் ஆளலாம் என்றுநம்பிடும், ஸ்ரீஜத் K. M. முன்ஷி.

ஆங்கில ஆட்சிகூடாது, சுயாட்சி வேண்டும், என்பது, அடிமைப்பட்டுள்ள இந்த உபகண்டத்திலுள்ள அறிவுள்ளவர் ஒவ்வொருவர் உள்ளத்திலிருந்தும் எழும் கீதம்! இந்த அடக்கொணு ஆர்வம், காங்கிரஸ் அங்காடிக்கு ஆரம்ப முதல் தொகையாக அமைந்தது. தாய்நாட்டுக் காதத் தலையறுபட்டுக்கீழேவீழினும், தத்தைமொழியாளை விட்டுப்பிரிந்து வெஞ்சிறைபுகநரிடினும், சுகவாழ்வினை இழந்து சொல்லம்புதாக்கிடினும் சோர்வுறுது, பஞ்சையாய் பராரியாய், சட்டமெனும் சவுக்குத்தரும் வடுக்களைச் சட்டைசெய்யாது, நாட்டுப் பணிபுரிகையில் கேடுபலசூழினும், மனங்குலையாத மாசிலாமணிகள், உழைத்தனர் காங்கிரஸ் அங்காடியிலே, இலாபம்கொழித்தது. ஈன்றதாயின் சிரம் கொய்தால் ஏதேனும் இலாபம் கிடைக்குமாயின் அதற்கும் துணியும் இயல்புடைய ஓரினம், பன்னெடுநாட்களுக்கு முன்பிருந்தே இந்தப்பரந்த நிலத்தைப் பாழ்படுத்திவந்ததை யாரறியார்! அதே இனம், நாட்டுப்பற்றெனும் ஆர்வத்தால் ஈட்டிய பொருளை, சூறையாடும் சூதெண்ணம்கொண்டு, அங்காடியிலே அமர்ந்து கொண்டது. பின்னரே, காங்கிரஸ் அங்காடியிலே கலகமும் எழுந்தது, காரியமும் கெட்டது, மனவேறுபாடு தலைகாட்டிற்று, மாற்றுக்கட்சிகள் தோற்றுவிக்கப்பட்டன. ஆங்கில ஆட்சிபோனுல், இங்கு ஆரிய ஆட்சி அமைக்கப்பட வேண்டுமென்று, காங்கிரஸ் கருதுகிறது, என்பதுபற்றி நாம்பன்முறைகூறினேம். ராமராச்யம் என்ற அடைமொழியைக் காந்தியார், சுயராச்சியத்துக்குச் சூட்டியதன் கருத்தே இதுதான் என்பதனை விளக்கினேம். ஆரியருக்கு அடிபணிய வைப்பதே வார்தாவலை வீசிகளின் எண்ணம் என்பதை எடுத்துக் காட்டினேம். இன்று வடநாட்டிலே வாழும், மாஜிமந்திரி, ஸ்ரீஜத் முன்ஷி எனும் முப்புரிதரித்த விப்பிரர், விக்ரமாதித்திய விழாக் கொண்டாடினராம்! அதிலேதான், ஆவலாகவும்ஆர்வத்தோடும் தன்போன்றவர்கள் விக்ரமாதித்ய ஆட்சி மீண்டும் இந்தியாவிலே ஸ்தாபிதமாக வேண்டுமென்று காத்துக்கொண்டிருப்பதாகவும் பேசினர். கட்டுக்கதைகளை நீக்கிவிட்டு, வரலாற்றுப்பகுதியை மட்டும் பார்த்தால், என், ஸ்ரீஜத் முன்ஷி, விக்கிரமாதித்ய ஆட்சியைக்காண விரும்புகிறுர் என்பது விளங்கும். அது, முதல்தரமான ஆரிய ஆட்சி, ஆகவேதான், ஆரிய ஆட்சியை அகண்ட இந்துஸ்தானிலே காணவிரும்பும் ஆரியர் முன்ஷி, விக்ரம ஆட்சிக்குத் தவங்கிடக்கிறுர்!

கி.பி. 380ல்,வடநாட்டிலேவல்லரசாக இரண்டாம் சந்திரகுப்தர் 40 ஆண்டுகள் வாழ்ந்தார். அந்த ஆட்சியிலே, ஆரியர்கள் சுகபோகத்துடனும் செல்வாக்குடனும் வாழ்ந்தனர். அதற்குமுன்பு, புத்தமார்க்கமெனுஞ்சுழற்காற்றுக்கிளம்பிஆரியத்தைத் தாக்கிற்று. அசோக சாம்ராஜ்யத்திலே, அன்புநெறி வளர்க்கப்பட்டு, ஆரியப்புரட்டுகளுக்கு வழி இல்லாமற் செய்யப்பட்டது. பலமன்னர்கள், சித்தார்த்தரின் சித்தாந்தத்தைச் சிரமேற்கொண்டதால், ஆரியருக்குச் செல்வாக்குச் சிதைந்தது. இது கண்டு மனம் வெதும்பிக்கிடந்த ஆரியருக்கு,குப்தவம்சம்புத்துயிர்தந்தது. அதிலே புகழ்பெற்ற சந்திரகுப்தன், தன்படை வன்மையால், பரந்த சாம்ராஜ்யத்தைச் சமைத்தான். வாணிபமும் வளமும் ஓங்கிற்று. சுகமும் செல்வமும் செழித்தது. வீரனின் இரத்தமெனும்நீர் பாய்ச்சி, வளமாக்கப்பட்ட பூந்தோட்டம்போன்ற குப்தசாம்ராஜ்யத்தை, ஆரியர் தங்கள் வேட்டைக்காடாக்கிக் கொண்டனர். இங்கு, பௌத்தம் ஒழிக்கப்பட்டது, பௌண்டரீகயாகபரம்பரைக்குப் பரிபாலனம் கிடைத்தது. இந்த ஆரியப்பணியைத் திறம்படச்செய்து, அசோகனு மணம் இலாதொழியச்செய்தான், விக்ரமாதித்தன். இவனுடைய குணங்குறித்து எழுதிய வரலாற்று ஆசிரியர்கள், தற்பெருமைக்காரன் என்பதையும், வீரதீர பராக்கிரமசாலி என்று தன்னைக் காட்டிக்கொள்வதற்காக விதவிதமான பட்டங்கள் சூட்டிக்கொள்வதிலே பிரியமுடையவனென்பதையும், சிங்கத்துடன் தான்போர் புரிவதுபோன்றஉருவை, நாணயங்களிலே பொறித்திடச்செய்து பூரித்தவன் என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளனர். இத்தகைய தற்பெருமைக்காரர், ஆரியரிடம் சிக்கிவிட்டால் போதாதா! வானளாவப் புகழ்ந்து, இந்திரனே, சந்திரனே, காமா, சோமா! என்று அர்ச்சித்து, இலாபம் பெறும் வழியை ஆரியர் நன்கு அறிவரன்றே! அவர்களுடைய மாயமொழி எனும்மது வருந்திய மன்னர், பிறகு சாம்ராஜ்யத்தையே, ஆரியராஜ்யமாக்கவும் இசைந்தனர். விக்ரமன் அத்தகையவனே! வீணரின் வெற்றுரைக்கு மயங்கியவனே! வீரரை விடுத்தான், இவ்வீணரை ஆதரித்தான். ஆரியருக்குப் "புதுயோகம்" பிறந்தது. ஆரியக்கவிகளுக்கு ஆஸ்தானங்களிலே பதவிகள்! ஆரியவேதாந்திகளுக்கு அரண்மனைவாசம்! ஆரியமத போதகர்கட்கு மாடமாளிகைகள்! அசோகர், தமது ஆட்சியிலே, அந்நாட்டுமொழியாக, பாலி இருத்தல்வேண்டுமென்று

பணித்தார். ஆரியரின் சமஸ்கிருதம், முதலிடத்தை இழந்தது. குப்தமன்னனே, சமஸ்கிருதத்தை ஆட்சி மொழியாக்கினான். காளிதாசனும், ஆரியப்பட்டனும், வாராகமித்ரனும், பிறஆரியப்பண்டிதர்களும் அகமகிழ்ந்துவாழ்ந்தனர். ஆரியக்கடவுட்களுக்குச் சிறந்தஆலயங்களும், ஆரிய வழிப்போக்கர்கட்குச் சத்திரம் சாவடிகளும் கட்டப்பட்டன. ஏன்களிக்கமாட்டார் முன்ஷி! முப்புரியன்றோ குப்த சாம்ராஜ்யத்திலே, முதல்தாம்பூலம் பெற்றுவந்தது!! அதேபோல, மீண்டும் ஆரியருக்குச் செல்வாக்கும் சுகவாழ்வும், கிடைக்கும், ஆட்சிவரவேண்டும் என்று, ஆரியஇனப்பற்றுமிக்க, முன்ஷி கூறுகிறார்.

ஆம்! சாம்ராஜ்யத்திலே, மற்றவர் எக்கேடுகெடினும், தனது இனம் வாழவழி இருக்கவேண்டும். மன்னர்கள், ஆரிய தாசராக இருக்கவேண்டும். சனாதனம் சாயாதிருக்கவேண்டும், என்பதேமுன்ஷியின் எண்ணம். ஆரியருக்குத் தேனும் பாலும்தந்த அதே சாம்ராஜ்யத்திலே, நாட்டுப்பழங்குடிமக்கள் இருந்தநிலையைச் சீனநாட்டுப் பெரியார், பாகியான், கூறுகிறார், கேண்மின். "சண்டாளர்கள், தெருவிலே நடமாடுவதானால், பிறர் கண்டுதீண்டித்தீட்டு ஏற்படாதிருக்க, ஊர் நுழையும்போது, கோல்கொண்டுதட்டி, தங்கள் வருகையைச் சத்தத்தின் மூலம் தெரிவிக்கவேண்டும்." புத்தமார்க்கம் புதைந்துபோய், ஆரியம் மீண்டும் தலைவிரித்தாடும் காலம்பிறந்ததும், நாட்டுப் பழங்குடிமக்களின் நிலைஎன்னவாயிற்று என்பதை எண்ணிப்பார்க்கவேண்டுகிறோம். நடமாடும் உரிமையுமற்று, நாட்டுப் பழங்குடிமக்கள் நலிய, ஆரியர் அகமகிழ்வுடன் ஆஸ்தானங்களிலே அமர்ந்து, அரசருடன் அளவளாவி வாழ்ந்தனர். இதுதான் விக்கிரமாதித்ய ஆட்சி! இதே முறையான ஆட்சி மீண்டும் வேண்டுமென்றுதான், பம்பாயிலேஉள்ள நவீன பட்டி, பகற்கனவு காண்கிறார். நர்மதைக்குமேலே, ஒருவேளை நடக்கக்கூடும், திராவிடத் திருநாட்டிலே அதுஇனி நடவாது, என்று பகற்கனவு காணும் பட்டிக்கு நாம் திட்டமாகக்கூறுகிறோம்.

## 'நகரதூதன்'

திருச்சியிலிருந்து தோழர் டி. எம். வெங்கிடாசலம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "நகரதூதன்" பத்திரிகையின் 14—11—43ல இதழ் ஒன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம்.

வருட சந்தா ரூ. 7.

## அடுத்த இதழில்.

சின்னாட்களுக்குமுன் கோவையில் திடீரென இயற்கை எய்திய பிரபல கலாநிபுணரும் டைரக்டருமான தோழர் இராஜாசாண்டோ அவர்களைப்பற்றிய குறிப்புகள் அடுத்த இதழில் வெளிவரும்.

## ஸ்டாலின் சர்க்கஸ்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டு முடிவுகள்யாவை என்பது தெரிவிக்கப்படும். இதனை இங்குள்ள இளித்தவாயர்கள் தெரிந்துகொள்ளவில்லை என்றபோதிலும், டோஜோ, தெரிந்துகொண்டிருக்கிறார். ஆகவேதான், எப்போதும் ஜம்பம் பேசும் டோக்கியோ ரேடியோகூட, "இந்த 1944ம் ஆண்டு நமக்குக் கஷ்டகாலம்" என்று கூறிற்று. பசிபிக் தீவுகள் ஒவ்வொன்றாக நேசக்கட்சியிடம் சிக்குவது, காற்று எப்பக்கம் வீசுகிறது என்பதற்குச்சான்று, கருத்துள்ளோருக்கு அது தெரியும்.

* * * *

ஓடிவந்தானே, ரோமல்
பாடிவந்தானே!
தேடிப்பார்த்தாலும் இன்றே,
ஆளைக்காணேமே!

என்ற கருத்துடன், சிறுவர்களுக்கான சிந்துகள் அமைத்து, மாஸ்கோரேடியோ, குழந்தைகட்குக் கூறுகிறதாம், லிபியா முதலிய வெற்றிகளைப்பற்றி. ஜெர்மன் வேகம் குறைந்துவிட்டது மட்டுமல்ல, இனிமேல் தலைதூக்கமுடியாது ஜெர்மனியால். மூவர் மாநாட்டிலே, இதற்கு முழுத்திட்டம் தயாராகிவிட்டது. கீவ் பகுதியிலே, சென்றவாரம், ஜெர்மானியர், கொஞ்சம் கைவரிசைகள் காட்டினார்களல்லவா! திருப்பித்தாக்கியும் பார்த்தார்களே! என்ன நடந்தது? காரியம் பலிக்காமல், மீண்டும் பின்னோக்கி ஓடுகின்றனர் ஜெர்மானியர். நீப்பர் நதியின் வளைவிலே, உள்ளஜெர்மன் படைகள், தங்கட்கு உதவிப்படைவரும், வரும், எனக்காத்துக் கிடந்தன. ஜெர்மன் படைத்தலைவர் கைவிரித்து விட்டாராம், உதவிப்படை அனுப்புவதற்கில்லை, உங்களை மீட்கமுடியாது, என்று தெரிவித்துவிட்டாராம். ரஷியப்படைகளோ, சம்மட்டி அடிகொடுத்துக்கொண்டே முன்னேறி முக்கியமான இடங்களைத் திருப்பிப் பிடித்தபடிஉள்ளன. மாரிகாலப் போராட்டத்தின் இரண்டாவதுவாரம் இப்போது நடக்கிறது. நதிகள் உறைந்து கொண்டுள்ளன! பனியின்மிகுதிபலபாகங்களிலே தென்படுகின்றன. ஆயிரக்கணக்கான கிராமங்களிலே, ரஷியமக்கள், ஜெர்மானியரைத் தொலைத்துவிடத் துடித்தபடி உள்ளனர். சென்றஆண்டு மாரிகாலத்திலே இருந்ததைவிட, இவ்வாண்டு ரஷியரிடம் அதிகமான போர்ப் பொருள்கள் உள்ளன. வீரமோ, தோல்வி மேல் தோல்வி கண்டகாலையிலேயே குறையவில்லையே, இப்போது வெற்றி மேல் வெற்றிகிடைக்கும் வேளையிலே, வீரத்திற்குப் பஞ்சமா! அதிலும், தெஹ்ரான் மாநாடு, ரஷியருக்குமேலும் அதிகமான உற்சாகத்தை யூட்டிவிட்டது. வீரமும் வீரருக்கேற்ற கருவியும் இருப்பதுடன், இப்போது ரஷியரிடம், ராணுவ முக்யத்துவம்வாய்ந்த இடங்கள் உள்ளன. எனவே இந்தஆண்டு மாரிகாலப் போர், ஜெர்மானியரை, ரஷியாவிலிருந்து விரட்டுவதோடுமுடியாது, விரட்டி விரட்டி, அடித்துக்கொண்டுபோய், நேசநாட்டு இரண்டாம் போர்முனை எனும் குழியிலே, விழச்செய்வதாக இருக்கும் என்பது, ராணுவநிபுணர்களின் கருத்தாகும். சென்றகிழமை, ரஷியரிடம், பிடிபட்ட ஜனமென்க்கா என்ற இடம், நீப்பர் நதிவளைவிலே உள்ளமுக்கியமான ஓர் ரயில்வே ஜங்ஷன். இது, பிடிபட்டதன்பலனாக, இந்த வட்டாரம் பூராவும் சோவியத்படைகள்இனிச், சுற்றிச்சுழன்று சுவஸ்திகக் கொடியோரைத் தாக்கமுடியும். இதுபோன்றே, செர்காசி வெற்றியும் மிகமுக்கியமானது. யுக்ரைன் வட்டாரத்திலே இந்த செர்காசி என்றஇடம், ஒருபொருளாதாரநரம்பு! இதை நாஜிகள் மிகத்திறமையாகப் பாதுகாத்துவந்தனர். இப்போது, சோவியத்படையிடம் செர்காசி சிக்கிவிட்டது. இந்த வெற்றிகளுக்குக் காரணமாக இருந்த தளபதி கோனீவ், என்பாரை, மார்ஷல் ஸ்டாலின் பாராட்டினார். வெள்ளை ரஷியாவிலே, வெற்றிமேல் வெற்றிகிடைத்து வருகிறது. ஸ்டாலின், தெஹ்ரானிலே, சிரித்தாரென்றால், அச்சிரிப்புக்குப் பொருள் இல்லாமற்போகவில்லை. ஸ்டாலின் சர்க்கஸ், அமைக்கும்படி, படாக்ளியோ கூறினபேச்சு, உண்மையிலே நடக்கக்கூடிய விதமாகவே, போரின் போக்கு இருக்கிறது!

## கோவைமாவட்டத் திராவிடர்கழகம்

18—11—43 ஈரோடு, ஆச்சிவிலாசக் கட்டிடத்தில், கோவை, மாவட்டத் திராவிடர் கழக அமைப்புக் கூட்டம் தோழர் சி. என் அண்ணாதுரை தலைமையில், நடைபெற்றது.

தோழர் என். அர்ஜுனன் அவர்கள் [பழயகோட்டைப் பட்டக்காரர் திருக்குமாரர்] தலைவர்.

தோழர் ஈ. கே. எம். அப்துல்கனி துணைத்தலைவர்.

தோழர் பெத்தாம்பாளையம் பி. பழனிச்சாமி அவர்கள் செயலாளர்.

**கமிட்டி மெம்பர்கள்**

எஸ். ஆர். சுப்பிரமணியம் திருப்பூர், பி. சண்முகவேலாயுதம் ஈரோடு, எஸ். ஆர். சந்தானம் ஈரோடு, ஈ. வ. அப்துல் கப்பூர் சாயபு, கோபி, ஜி. பி. சேத்துராமன் கோபி, கனகராஜ் உடுமலைப் பேட்டை, அபீப் ஈரோடு, சி. பழனிச்சாமி குண்டடம், மேலும் 6 மெம்பர்களைச் சேர்த்துக்கொள்ளக் கமிட்டியினருக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

## கைவல்யம் கடிதம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடத்திற்கெல்லாம் வித்து, சமயாச்சாரிகளும் பண்டிதர்களும் பாட்டாய்ப் பாடினதையும் ஆலோசிக்கிறார்கள். சிவம் என்றால் எங்கும் 'நிறைந்த பொருளல்லவோ, எங்கும் நிறைந்த பொருள், எங்கிருந்து வடக்கே வந்தது? தெற்கு உயர்வதற்குத் தெற்கேயிருந்த சிவம் எங்கு போயிற்று? தென்தேசத்தாரை எய்க்கவந்த அகஸ்தியனுக்கு இலக்கணம்சொன்ன சிவன் தெற்கே அதற்குமுன் இல்லையா? தமிழ் இல்லையா? இலக்கணம் இல்லையா? அகஸ்தியர் இலக்கணமொன்றிருந்தால், சிவபெருமானின் இரண்டாவது பெண்சாதி கெங்கை அதைமட்டுமா அடித்துக்கொண்டுபோவாள்? அகஸ்தியர் இலக்கணம் அந்த ஏட்டில் இருக்கிறது, இந்த ஏட்டில் சிறிது மேற்கோள் காட்டப்பட்டது, என்று நமதுபண்டிதர்களே அதா? இதா? அது-இது என்று சொல்லியே வந்துவிட்டார்கள். அது, அவர்கள் படிப்பின் திறத்திற்குப் பெருமையாகவும் நினைத்தார்கள். சோழவந்தான் இலக்கணப் பண்டிதர் சண்முகம் பிள்ளை ஏட்டிலும் அகஸ்தியர் இலக்கணம் தண்ணீரில்தான் இருக்கிறது. சிவபெருமான் பேரில் சொன்ன ஒரு சிறுவார்த்தை மதுரைத் தண்ணீரில் எதிர்த்து வந்ததே! சிவபெருமானால் அகஸ்தியருக்குச் சொல்லி அதை இலக்கணமாகச் சொன்ன அகத்திய இலக்கணம் தண்ணீரில் முழுகிப் போனதென்றால், அது ஆச்சரியமல்லவா என்றும் ஆலோசித்துப் பார்க்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் நியாயங்களும் சாஸ்திரங்களும் குடிஅரசில் காட்டினோம். பின் எழுதப்படுகிற கடிதத்தில் எல்லாருக்கும் விளங்கும்படியாக எழுதுகிறேன். இதெல்லாம்தங்களுக்குத்தெரியாதென்று எழுதுவதல்ல. எங்கள் நியாயமும் உண்மையும் எல்லாரிடத்திலும் போகவேண்டும். நீங்களோ எங்களுக்குக் கவலைப்படிப்பில்லை என்கிறீர்கள். எப்படியானாலும் நீங்களும் நாங்களும் அறிவுச்சுடர் கொளுத்திய வீதியில் சந்தித்துத் தானே ஆகவேண்டும்!

இங்ஙனம்,

**கைவல்யம்.**

## பெரியார்.

சென்னை சுந்தரவதனம் நர்சிங் ஹோமில் சிகிச்சைபெற்றுவரும் நமது தலைவர் பெரியார் அவர்கள் குணமடைந்து வருகிறார். இன்னும் இரண்டு வாரங்களுக்கு ஆஸ்பத்திரியிலேயே இருக்கும்படி டாக்டர் சொல்லியிருக்கிறார்.

## சென்னை.

டிசம்பர். 6-

செங்கற்பட்டு மாவட்டத் தலைவர் தோழர் T. ஷண்முகம் அவர்களுக்கும், உபதலைவர் தோழர் முத்துலிங்கா ரெட்டியார் அவர்களுக்கும் 4—12—43 சனிக்கிழமையன்று மாலை 4-30 மணிக்குத்திருவொற்றியூர் பொதுமக்களின் சார்பாக ஓர் தேநீர் விருந்து பஞ்சாயத்துபோர்டுக் கட்டிடத்திற் கெதிரில் அமைக்கப்பட்டிருந்த கொட்டகையில் நடைபெற்றது. புகைப்படம் எடுக்கப்பட்டதும் நடந்த பொதுக்கூட்டத்திற்கு குமாரராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள் தலைமைவகித்தார். தலைவர், உபதலைவர் ஆகிய இருவருக்கும் திருவொற்றியூர் வாசிகளின் சார்பில் வாழ்த்துப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. பெரியார் E. V. இராமசாமி, தோழர் C. N. அண்ணாத்துரை, தோழியர் குஞ்சிதம் குருசாமி, தோழர் S. S. அருணகிரிநாதர், தோழர் வெள்ளையன் செட்டியார், ஜனாப் சையத்தாவூத் ஆகியோர் இருவரையும் பாராட்டிப்பேசினர். பாராட்டுரைகளுக்கு இருவரும் பதிலளித்த பின்னர், பேபி ரஷ்யாவின் (குஞ்சிதம்-குருசாமியவர்களின் மகள்) நடனக் கச்சேரி நடைபெற்றது. தோழர் T. சண்முகம் அவர்கள் ஓர் தங்கப் பதக்கத்தை பேபி ரஷியாவுக்கு அளித்தார். இறுதியில் தோழர் சின்னா என்பவர் ஜாலவித்தைகளைக் காட்டினார்.

## கடையநல்லூர் கமாலிய முஸ்லீம்சங்க 10-ம் ஆண்டுவிழா.

மேற்படி, விழா, 11-12-43; 12-12-43, இருநாட்களும், சென்னை, "நூருல் இஸ்லாம்" ஆசிரியர் A. N. **முகமது யூசுப்பாகவி** தலைமையில், விமரிசையாக நடைபெற்றது. ஜனாப். ப. ப. சிகாம்பவுண்டில் அமைக்கப்பட்டிருந்த விழாப்பந்தலில், ஏராளமான மக்கள் கூடினர். தென்காசி, மேலப்பாளையம், முகவூர், இராஜபாளையம், ஆகியசுற்றுப்புறங்களிலிருந்தும், தோழர்கள் வந்திருந்தனர்.

கொடியேற்றியும், திறப்புவிழாவாற்றியும், இஸ்லாத்தின் கட்டளைகள் எனும் பொருள்பற்றிச் சொற்பெருக்காற்றியும் ஜனாப் கே. எல். எம். அகமதுமுகயதீன் அவர்கள், மக்களிடை உற்சாகமூட்டினார்.

தலைவரின் உரையிலே, முஸ்லீம்களின் முற்கால தற்காலநிலையும், விடுதலைக்குரிய வழிகளும் விளக்கப்பட்டன.

பொள்ளாச்சித்தோழர் **பாபுசாகிப்** பாகிஸ்தானால் என்ன நன்மை என்பதை விளக்கிப்பேசினார். இஸ்லாமும் பகுத்தறிவு இயக்கமும் எனும் பொருள்பற்றித் தோழர் அ. பொன்னம்பலனாரும், தற்காலயுத்தமும் நமது கடமையும், அரசாள்வோர் கடமையும் எனும் பொருள்பற்றி தோழர் அண்ணாத்துரையும் பேசினர். செயலாளரின் நன்றிகூறலுடன் விழாமுடிந்தது.

## திராவிடர் கழகம் புவனகிரி

9—12—43 மாலை 6-மணிக்கு கழக அங்கத்தினர்கள் கூட்டம் கூடிற்று தோழர் கி. நமசிவாயம் தலைவர் சோ. சிதம்பரநாதன் துணைத்தலைவர். ரா. குருகேசன் செயலாளர், கு. சிதம்பரம் துணைச்செயலாளர், ம. சச்சிதானந்தம் பொருளாளர் மற்றும் ஆறு அலுவல் குழுவினர்கள் ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

பெரியார் அவர்களைத் தருவித்து ஷை கழகத்திறப்பு விழா ஆற்றவும், அத்துடன், அண்ணாத்துரை அவர்களையும் வருவிப்பது என்றும், புவனகிரியைச் சார்ந்த சுற்றுக், கிராமங்களில், இயக்கப்பிரசாரம் செய்யநமது இயக்கத்தோழர்களில் இரண்டொருவரை அழைப்பது என்றும், ஏகமனதாய்த் தீர்மானிக்கப்பட்ட பின் தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் நன்றி கூறலுடன் இனிது முடிந்தது.

## தமிழ் இசை மகாநாடு, சென்னை.

23—12—1943 வியாழன் மாலை 4-½ மணிக்குச்சென்னை செயின்ட்மேரி மண்டபத்தில் தொடக்கம். மகாநாட்டுத்தலைவர் **திரு. T. K. சிதம்பரநாத முதலியார் B. A; B. L;** வரவேற்புக் கழகத் தலைவர் **ராவ்பகதூர் P. சம்பந்த முதலியார் B. A; B. L;** மாநாட்டுத் திறப்பாளர் **ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார்.**

சொற்பொழிவுகள்.—

தோழர்கள் 1. சர். R. K. ஷண்முகம் செட்டியார் 2. இந்திராணி பாலசுப்பிரமணியம் 3. இராஜகோபாலாச்சாரியார் 4. கல்கி R. கிருஷ்ணமூர்த்தி 5. வித்வான் K. பொன்னையா பிள்ளை 6. வித்வான் டைகர் வரதாச்சாரி 7. புரோபசர் P. சாம்பமூர்த்தி B. A; B. L; 8. லீலாவதி இராமசுப்பிரமணியம் 9. T. S. சொக்கலிங்கம் 10. நகைச்சுவை அரசு N. S. கிருஷ்ணன் 11. S. முருகப்பா 12. சோமசுந்தர பாரதியார் B. A; B. L; 13. வித்வான் T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை எம். ஏ; பி. எல்; எம். ஓ. எல்; 14. வி. கல்யாணசுந்தர முதலியார் 15. மீனாம்பாள் சிவராஜ் முதலியோர் பேசுவார்கள்.

23—12—43 முதல் 4—1—44 வரை, தமிழ் இன்னிசை ஒவ்வோர் நாளும் உண்டு.

## வர்ணாஸ்ரமம் ஒழிக.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றேன். அதுபோன்றபூஜை போடும் முறை, அரசியலிலே, மகாஆபத்தாயிற்றே என்றே நான் அஞ்சுகிறேன்.

மேலும், கட்சிப்பணிபுரியத் தலைமைப் பதவிதேவையா, என்பது, ஆழ்ந்து பதில்கூறவேண்டிய கேள்வி என்பதை அறிஞர் சண்முகம் அறிவார். பெரியார் கட்சித்தலைவராக இருக்கையிலேயே, அவர் பக்கநின்று சர். சண்முகம் பணியாற்றவும், தமிழகம் அதைக்காணவும், ஒருகாலம் பிறக்கக்கூடாதா! இதோ எனது குடும்பமுதியோர்! என்று பெரியாரைச் சர். சண்முகம் சுட்டிக்காட்டவும், "நான் வயதேறியவன், இதோ என் இளமையின் உருவம்" என்று பெரியார், சர். சண்முகத்தைச் சுட்டிக்காட்டவும், ஆலுக்கு விழுதுவிட்டது என்று ஆரியர் இதுகண்டு அஞ்சவுமானநிலைமை, ஏற்படக்கூடாதா! பெரியாரின் தவறுகள்-பெரியாரின் குறைபாடுகள்-அவர் செய்யும் பிடிவாதம்-அவருடைய ஆற்றல் குறைவு-என்ற இன்னோரன்ன பிறகூறி, பெரியாரைக் கண்டித்துவிட்டு, அவராலேயே கட்சி நசித்துவிட்டது என்று பொய்யுரைத்துவிட்டு, ஆகவே சர். சண்முகம் வரவேண்டும், என்று அழைக்கும் தோழர்கள், உண்மையிலே, சர். சண்முகம், தலைவராகவேண்டுமென்று விரும்பி இதைச்செய்கிறார்களா?என்பதேஎன்சந்தேகம். நாதியற்று, நடுத்தெருவிலேகிடத்தப்பட்ட அகதியைப் பெரியார், இன்று கூரைவீட்டிலே குடியிருக்கச் செய்திருக்கிறார், இனி மாடிவீடுகட்ட, சர். சண்முகம், வரட்டும், வரவேண்டும், வருவது முறையுங்கூட. அதைத்கூறாது, ஏழடுக்கு மாளிகையைப் பெரியார் குட்டிச்சுவராக்கிவிட்டதாகவும், மண்மேட்டிலே மாளிகை அமைக்கச் சர். சண்முகம் வரவேண்டுமென்றும் கூறுவது அழகா, நீதியா, மனச்சாட்சிக்குச் சரியாஎன்று கேட்கிறேன். உண்மையிலே, சர். சண்முகம், வேறுவேறு இடங்கட்கு "இரவல்" அளிக்கப்பட்டிருந்தபோது, அவருக்கும் எனக்கும், தமிழர்யாவருக்கும் சொந்தமானமனை, அரசியல் மார்க்கட்டிலே, காங்கிரஸ் மார்வாடியிடம் சிக்கி, ஏலம் கூறப்பட்டபோது, மனையைமீட்டவர்யார்?-இதனை மற்றவர் கூறுவதைவிட, சர். சண்முகம் கூறவேண்டும். சண்முகமாலைபாட பெரியாரை வசைபாடவேண்டுமா! சண்முகவரவு பெரியாரின் துறவாக முடியவேண்டுமா! இருவரும் இருக்குமளவு, கட்சியிலே, இடமில்லையா! தேரை விரைவாகச் செலுத்தி, சர். சண்முகம், தமது மனைபுகவேண்டுகிறேன். ஆயிரக்கணக்கிலே தொண்டர்கள் அவரை ஆரவாரத்தோடு வரவேற்பர்! சிலம்பொலியும் பூஜையும்வேண்டாது, நேரே, நொந்துகிடக்கும் முதியவர் அருகேநின்று, "பெரியாரே! அஞ்சற்க! வினைமுற்றிநான் வீடு திரும்பிவிட்டேன். இனி உமது பணிகுறைய, நான் உதவி புரிவேன். என்ஆற்றல் இனிநமது மனைக்குப் பயன்படும்" என்றுகூறவேண்டும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாருக்கு அவர் அளித்தஅறஉரையின், அடுத்தஅதிகாரம், இதுவாகஇருக்கவேண்டுமென்பது என்அவா! அதுகூடேறுமா?

சர். சண்முகம், கட்சித்தலைவராக வேண்டும், என்ற பிரச்னையைக்கிளப்பும் வேலையுடன் வேலையாகப், பெரியாரைக் கண்டித்தும் சிலர் இருப்பது, உண்மையில் எனக்குப்பிடிக்கவில்லை. சர். சண்முகத்துக்கும் அதுபிடிக்காது என்றே நான் கருதுகிறேன். பெரியாரின் பெருந்தொண்டு, வரப்பும் வாய்க்காலும் அமைந்த கட்சிக்குமட்டுமல்ல, தமிழகத்துக்கே பெரிதும் பயன்பட்டதென்பதை மறுத்துப்பேசுவோர், நாளை சர். சண்முகத்தைச் சாடாமலா இருப்பர்! தமிழரின் தன்மானத்துக்கே வித்தூன்றிய தலைவரின் வயோதிகப்பருவம், வாகைசூட்டி வாழ்த்தும் "பக்தர்கள்" நிரம்பியதாக இருப்பதுமுறை! அஃதுஇல்லையே, என்ற குறையோடுமட்டுமின்றி, அவருக்கு வசைவுமாலை தொடுத்துச் சூட்டிடல் முறையாகுமா, என்று கேட்கிறேன்.

உலகிலே, பலபல தீவிரவாதிகள் தோன்றியதுபற்றிய வரலாறுகள் எனக்குத் தெரியும். நாத்திகம்பேசிய நாவலரையும் நானறிவேன். நெருப்பாறு தாண்டும் வீரரும் எனக்குத்தெரியும். ஆனால், அவர்களுக்கும், பெரியாருக்கும்உள்ள ஒருபெரிய வித்யாசத்தை உணரவேண்டுகிறேன். அவர்கள் படித்த, பக்குவமனம் படைத்த கூட்டத்திலே பேசினர், அவர்களுக்கு எழுதினர். பெரியாரின் பணி, தற்குறிகள்நிரம்பிய தமிழகத்திலே, கல்வீச்சு மண்வீச்சுக்கிடையே, என்பதை அறியவேண்டும். அதிலும் சகலமும் உணர்ந்த சகலகலாவல்லபர்களும், வெறும் சாமியாடிகளைக் கண்டித்துப் பேசவும் சக்தியற்றுக்கிடந்தகாலை, பெரியாரின் பெருங்காற்று தமிழகத்திலே, வீசி, நச்சு மரங்களை வேரோடுகீழே பெயர்த்தெறிந்தது என்பதை உணரவேண்டும். உணர்ந்திடின், கட்சித்தலைமையை ஏற்கச் சர். சண்முகம் வரவேண்டும் என்று எழுதுவதுடன், பெரியாரையும்சேர்த்துக் கண்டிக்கும்செயலை எவரும் புரியார். சர். சண்முகம், கட்சியின் நடுநாயகமாகத் திகழ்வதற்குப் பிறரின் தூண்டுதல் தேவையா! அதிலும் தூற்றல் முதலடியாகவும் தூண்டுதல் கடையடியாகவும்கொண்ட கவிதை, காதுக்கும் கருத்துக்கும் கேடுண்டாக்கும், கட்சியிலே கலகலப்பையும், அதன்மீட்சிப் பாதைக்கு வழி அடைப்பையும் உண்டாக்கும் என்பது என்அபிப்பிராயம். அதனை நான் வெளியிட்டதற்குக்காரணம், பெரியாருக்குவக்காலத்துப் பெறவேண்டுமென்பது அல்ல. அவர் எவ்வளவோ எக்ஸ்-பார்ட்டிதீர்ப்புகளைக்கண்டு கடகடவெனச் சிரித்துவிட்டு, மடமடவென நடப்பவர். சர். சண்முகம்போன்றாரின் பணி, கட்சிக்கும், கட்சியின் மூலம் தமிழருக்கும் பயன்படவேண்டுமே, என்ற கவலையினாலேயே, இதனை எழுதினேன்.

இன்றுமுதல் வேண்டுமானால் சர். சண்முகம், கட்சிப்பணி புரியத்தொடங்கட்டும், ஆயிரக்கணக்கிலே வாலிபர்கள் அவருடைய அணிவகுப்பிலே நிற்பர், அதைக்காணலாம். கட்சியின்பொருட்டு, கொள்கைக்காக, திராவிடத்தனி அரசு அமைக்கத் தியாகமும் வீரமும் உடனிற்கச் சர். சண்முகம், போர்க்கோலம் பூண்டால், எத்தனையோ வாலிபர்கள், தங்கள் வாழ்க்கையினைத் திரணமாகக் கருதி, தீயிலே குதிக்கவுந்தயாராவர். ஓராண்டுகட்சித் தொடர்பு, ஈராண்டு கட்சிநிழல், மூன்றாண்டு கட்சிமுறைவல் பெற்றோரும், இன்னமும் எனக்கொரு பதவியில்லையா, பட்டம் கிட்டவில்லையா, என்றுகேட்டிடுவது என்போன்றவர் உள்ளத்தை என்னபாடுபடுத்துகிறது, என்பதை விவரிக்கத் தேவையில்லை. இத்தகையோர் மத்தியிலே இருந்தபோதும் ஒருசில உண்மைத் தொண்டர்கள், உள்ளமொடிந்துபோவதும், விழலுக்கு நீர் வார்த்துக் கெடுவானேன் என்று எண்ணுவதும் சகஜந்தானே! இந்நிலையை நீடிக்கவிடுவது, திராவிடநாட்டைக் கெடுப்பதாகும் என்று எச்சரிக்கிறேன், விசனத்தோடு. கட்சித்தலைவர் மாறவேண்டுமென்பதற்காகப் பெரியாரைக் கண்டித்து எழுதுவது முறையாகாது என்பதையும், கட்சிக்குப்பணிபுரிய, தலைமைப்பதவி இன்றியமையாததல்ல வென்பதையும், தியாகஉணர்ச்சியுடன் தொண்டாற்றும் திறன்உள்ளதலைவர் வேண்டுமென்பதையும், இன்று நமக்குவேண்டிய தலைவர் அரசாளஅல்ல, அரசுஅமைக்க, என்பதையும் எடுத்தெழுதினேன். இவ்வளவும், வர்ணாஸ்ரமம் ஒழிக! என்ற பாணியைப் பல்கலைக்கழகத்திலே, அன்று சர். சண்முகம் பாடினதன்விளைவே. எனக்கு எவ்வண்ணம், இப்பாணி, எழுச்சியை ஊட்டிற்றோ, அதேபோல, இந்து, மித்திரன், முதலிய ஏடுகட்டு எரிச்சலையூட்டிற்று. பாசிபடர்ந்த மனத்திடம் நான் பரிசுத்தத்தை எதிர்பார்க்கவில்லை, எனவே அப்பத்திரிகைகளின் போக்கு எனக்கு வியப்பூட்டவில்லை. அவை கக்கியகண்டனம், காசநோயாளியின் இருமல்போல, அவைகளின் நோய்க்குள்ள குறிகளேயன்றி வேறல்ல, எனவே பரிதாபமன்றிச் சீற்றமெழவில்லை, அவற்றிடம். ஆனால் அவைகளிலே ஒன்றான மித்ரன், கண்டனத்தினூடே கோர்த்திருந்த ஒருகருத்து, என்னைச்சற்றுச் சிந்திக்கச்செய்தது, தோழர்களே! சற்றுச்சோகத்தையும் தந்தது.

(8-ம் பக்கம் பார்க்க)

## வர்ணாஸ்ரமம் ஒழிக.

7-ம் பக்கத்தொடர்ச்சி.

சர். சண்முகம், வகுப்புத்துவேஷம் வளர்க்கிறார், என்றுரைத்தது மித்ரன். இது, பழயபஞ்சாங்கத்திலே ஒருபகுதி! அதுகண்டுநான் ஆச்சரியப்படவுமில்லை ஆயாசப்படவுமில்லை. "நாசமாய்ப்போனவன், மணி பனிரண்டாகியும் தூங்கக் காணோமே" என்று கைநொடிப்புடன் கூறுவாள் கள்ளி. காமவேதனையாலும், அதனைத் தீர்த்திடும் கள்ளப்புருடனாலும் பீடிக்கப்பட்ட கள்ளிக்குக், கணவன் விழித்திருப்பதுகூடக் குற்றமெனத் தோற்றும். விபசாரியின் இந்த விசாரத்தைக்கண்டு, "அபசாரம் அபசாரம்" என்று கூறும்பேர்வழி, ஆண்மையற்றவனாகத்தானே இருக்கமுடியும்! வில்லுக்கு ஒரு அம்பு, பல்லுக்கு ஒரு எலும்பு, அதுபோல் பாதிராத்திரி வேளையிலே பக்கத்துக்கோர் ஆள், தேடும்பாதகியின் மொழியைத் துச்சமெனத் தள்ளிடுதல்போல, நான் ஆரியஏடுகளின், கண்டனமொழிகளைத் துச்சமாகவே கருதுகிறேன். ஆனால் மித்ரன் ஒன்று எழுதிற்று, என் உள்ளம் கொஞ்சம் வேதனையடைந்தது. சர். சண்முகம் வர்ணாஸ்ரமக் கோட்டையைத் தகர்க்கவேண்டுமென்று கூறுகிறார். அவர் நமது பழயநூற்களின் அருமை பெருமைகளை இப்போதுதான் கொஞ்சங் கொஞ்சம் தெரிந்துகொண்டதாகக்கூறுகிறார். இனி, அவைகள் முழுதும் உய்த்து உணர்ந்துவிட்டால், வர்ணாஸ்ரமக் கோட்டையைத் தகர்க்கும் எண்ணத்தையே, அவர் கைவிட்டு விடுவார்!-என்று மித்ரன் எழுதிற்று.

சர். சண்முகம், கலையின் உயர்வுபற்றி, தமிழ்க் காப்பியங்களின் அருமை பெருமை பற்றிப்பேசினாரல்லவா! அதை மித்ரன், தனக்குச்சாதகமாக உபயோகிக்கிறது. வர்ணாஸ்ரமத்தை ஒழிக்கவேண்டுமென்ற எண்ணம் ஒருநோய், தமிழ்க்கலையுணர்வு, அதனை நீக்கிடும் ஒரு மருந்து; மருந்துபோன்ற அந்தக்கலையுணர்வினைச் சர். சண்முகம், இப்போது கொஞ்சம் கொஞ்சமாக உட்கொண்டு வருகிறார், இன்னும் மருந்தினைச்சற்று அதிகமாகப் பருகினால், நோயே போய்விடும், என்ற தொனியிலே மித்திரன், தனது தம்பூரை மீட்டுகிறது. இது வெறும் நாரதகானமாக இருக்கக்கூடும். வர்ணாஸ்ரமம் நோயா, வர்ணாஸ்ரமத்தை ஒழித்தாக வேண்டும் என்ற விருப்பம் நோயா, எது நோய், என்பது, வேறுவிஷயம். கலை, மருந்தா விருந்தா, என்பது வேறு விஷயம். இதுவரை, அறிஞர் யாவரும், நாட்டை நலியச்செய்த நோய், வர்ணாஸ்ரமம் என்றே கூறினர். வர்ணாஸ்ரமத்தை மித்திரன், நாட்டைவளமாக்கும் வனிதாஸ்ரமமாகக் கருதலாம், மித்ரபலம் பெருக அது ஏதுவாகக்கூடும்: அதுவும் வேறுவிஷயமே. வர்ணாஸ்ரமத்தை ஒழிக்கும் எண்ணம், பழங்காப்பியப்படிப்பினால் பாழ்பட்டு விடும், என்ற கருத்தை மித்திரன் வெளியிட்டிருக்கிறது; உவமைத்தகரூருகளை ஒதுக்கிவிட்டால் இது விளங்குகிறது. இதிலே உள்ள சூட்சமம், என்னைச்சோகிக்கச் செய்கிறது. உண்மையிலேயே, கலை உணர்வு பெருகப் பெருக, தமிழர் என்ற இனஉணர்வு அருகுமோ, அண்ணல் சண்முகத்துக்கும் இது நேருமோ, என்றே நான் அஞ்சுகிறேன். சர். சண்முகம், இதுபோது, தமிழ்க்காப்பிய மெனும் பூங்காவிலே உலவுகிறார் என்பதும், அங்குபறித்தெடுத்துத் தொடுத்த அழகிய மாலையினை வசந்த வட்டிலிலே வைத்துத் தமிழருக்குத் தருகிறார் என்பதும், கலாரசிகர்களுடன் கூடிக்குலவி, காவியக்கனிரசமருந்திக்களிக்கிறார் என்பதும் பிறர்சொல்ல நான் கேட்டிருக்கிறேன். மித்திரனும் அதனை அறிந்து, "சரி! சரி!! அந்த ரசம் இன்னம் கொஞ்சம் உட்கொண்டால், வர்ணாஸ்ரம ஒழிப்பு என்ற பேச்சு ஒழியும்" என்று எழுதுகிறது. இது என்னைச் சிந்தனையிலாழ்த்திற்று. அடுத்த இதழிலே, சிந்தனைபற்றிக் கூறுகிறேன், இதுபோது நீவிர்சற்றே உமது சிந்தனையைச் செலவிடவேண்டுகிறேன், மித்திரன் கூறினவாசகத்தின் மர்மம் என்ன?

---

## "மூன்று புதிய நாடகங்கள்"

முத்தமிழ்க்கலாவித்வரத்தின T. K. S. சகோதரர்கள் 1944-ம் ஆண்டின் ஆரம்பத்தில் 'வீரசிவாஜி, காளமேகம், பில்ஹணன்' ஆகியமூன்றுபுதிய நாடகங்களை நடத்தப்போவதாக அறிவிக்கின்றார்கள். காளமேகத்தை முழுதும் நகைச்சுவை ததும்ப "T. K. முத்துசாமி" எழுதியிருப்பதாகவும், காளமேகத்தின் கவிகள் இதில்நிறைந்திருக்குமென்றும் தெரிகிறது.

M. K. T. பாகவதர் நடித்த ரேடியோ "பில்ஹணனை" அழகுற எழுதிய A. S. A. சாமி அவர்களைக் கொண்டே விரிவாக இவர்கள் பில்ஹணன் நாடகத்தை எழுதியிருக்கிறார்களாம். இதன் சம்பாஷணைகள் உயர்ந்த முறையிலிருக்குமெனத் தோன்றுகிறது.

மேற்குறித்த மூன்று நாடகங்களையும் நடத்திவிட்டுத்தான் இவர்கள் ஈரோட்டை விட்டு கிளம்புகிறார்கள் போலிருக்கிறது.

---





பவுன்நிறமுள்ள

# கிளி மார்க் பட்டணம் பொடி

தென்இந்தியா எங்கும் புகழ்பெற்றது. காரம், மணம், நிறம், வாட்ட கமழும்
எமது கிளிமார்க் பட்டணம் பொடியை உபயோகியுங்கள்!
ஒருமுறை உபயோகித்தால் என்றும் நீங்காது ஞாபகம்.

விலை விபரம்.

| | | | |
|---|---|---|---|
| நீ-1. பவுன்கலர் வீசை 1க்கு | ரூ. 8—8—0. | நீ-1. கருப்புநிறம் வீசை1க்கு | ரூ. 8—0—0. |
| நீ-2. பவுன்கலர் ,, | ரூ. 7—0—0. | நீ-2. கருப்புநிறம் ,, | ரூ. 6–12—0. |

ஏஜண்டுஇல்லாஊர்களில் ஏஜண்டு தேவை.

**எ. எஸ். ராஜன் கம்பெனி,**

9-வெங்கடாசல நாய்க்கன்தெரு, பழய வண்ணாரப்பேட்டை, சென்னை.


Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.

# END OF ISSUE